ஸ்ரீ:

# திருநகர்த்தாள் கொடுத்துதவிய

# திருத்துறை

BY


சை. கிருஷ்ணமாசாரியார், B. A., L. T.

இந்து ஹைஸ்கூல்

திருவல்லிக்கேணி



சென்னை

"கார்டியன் அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது

---

1919



*"All Rights Reserved"*

# மலர்மகள் வணக்கம்

(பஃறொடை வெண்பா)

இருபாலிரட்டை
எழிற்கவரி வெள்ளைக்
கரியிரட்டக், காளமேக
வார்கூந்தற் காலினாலத்,
தாமரையிற் றாமரைபூத்
தாலென்ன மென்கரத்தாள்,
மின்னலிடை மின்னுமணிப்
பூணார மார்பினாள்,
மாலின் மனை, செய்ய
தாமரையாள், மையுண்ட
காதளாய கண்ணினாள்,
கண்டென் மனதிற்
குடிகொண்டாள்
என்னோ குறை!

ஸ்ரீ:

திருநகர்த்தாள் கொடுத்துதவிய

# திருத்துறை

*இச்சிறுநூல் இயற்றப்பட்ட வரலாறு:—

வெயில் நன்றாய்க்காய்ந்து முற்றுந் துறந்த முனிவர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகு மந்தணர்க்கும் உள்ளும் வெளியும் வறண்டுதண்ணீர்! தண்ணீர்! எனக் கதறும்படியிருந்த ஒரு ஞாயிற்றுக்கிழமை பகல் 11-30-க்குச் சைதாப்பேட்டையிலிருந்து புகைவண்டியேறிச் சுமார் 19-வயதுள்ள வைணவ வாலிபனொருவன் பட்டணம் 'பார்க்கு' ஸ்டேஷனில் வந்திறங்கி

---

*Reprinted from பக்கம்-304 'ஞானபோதினி' 1900௵ மார்ச்சு௴ 20௳ Vol. 3 No. 8

ஞன். இறங்கிச் சற்றுதூரம் பெரிய ரஸ்தா வழியாய் நடந்து பின்னர் ஒற்றைவாடைச் சந்தில் திரும்பும்போது தன்முன், சுடர் கான்று விளங்குஞ் சுட்ட பொன் சிலை யெனத்தயங்கும் இருவர் பெண்வடிவாய்க் கைகோர்த்து வீதியின் ஒருபக்கம் நிற்கக் கண்டான். கண்டதும் இச்சிறுவன் தலை வணங்கிக் கண் கீழ்நோக்கிச் செல்லுந் தன்னீர்மை ஏதோ அப்போது சற்று நீங் கினதனுலும், அம்மாது சிரோமணிகளி வன்பாலேதோ ஓரருள் புரியவேண்டி வந்து நின்ற தெய்வத் தோற்றத்தின ராத லாலும், அவரை இவன் சற்று உற்று நோக்கினுன். அத்தெய்வ வேளையிற் கிரு பாகடாக்ஷத்தோடு பொருந்திய அவ்விரு வர் குவளைக்கண்களும் இவனைநோக்க இச் சிறுவன் கேளாவண்ணம் ஏதோ தமக்குட் பேசிய வவ்விருவர் திருவாய்களும் இவ னைப் பிள்ளாயென் றழைத்தனவே.

இச்சிறுவன்பால், வேண்டியோர்க்குத
வும் நற்குணம் இனிதமையப் பெற்றிருந்
ததனாலும், 'விதிபோலெமக்குறு நின்றனை
யாவிகொண் டெம்மெதிரே' என்றிச்சிறு
வனை பின்பாடியபடி விதிபோற்றள்ளி
னும் தள்ளாமை நீர்த்தாய் நின்றனாவ
ர்தலானும், அவர் தந்தாமரைப்பாதங்
களையே தன்னுடைய கண்களிரண்டும்
நோக்கின வண்ணமாய் அவரை யனாக
லுற்றனன். அவர் இவனை 'இவ்வூர் வை
ராகிமடம் நிற்கும் நிலை நீரறிவீரோ?'
என்ன, இவன் 'அடியேன் அறிவேன்
அன்னையீர்' என்றனன்.

பின்பவருள் மூத்தவள் 'நாங்கள் இருப்
பது காவிரி ஸ்ரீரங்கம், பெரிய பெருமாள்
கோயில், இங்கோர் காரியமாய் வந்திருந்
தோம், இஃது அங்கேபோகும் பயணம்,
நீர் இத்திறவுகோலைப்பெற்று வைராகி
மடத்தருகிலிருக்கும் எமதகத்துத் தந்து

போகக் கோருகின்றனம். இஃதெம தகத் துப் பணப்பெட்டிச்சாவி, என்று சொல்லு மளவில் அவருட்சிறியவள் அத்திறவுகோ லைச் சர்வாலங்காரத்தோடும் பொருந்திய தன் திருமார்பினின்று மோராபரணங் கழற்றுவதுபோற் றொடிவளைக் கையாற்று ழாவி யெடுத்து நீட்டினள். நீட்டிய வத்தி றவுகோலைத் தன்றிருக் கைகளாற்பெற்ற வச்சிறுவன் 'அன்னையீர் நுமது திருநாமம் அடியேனுக்குத் திருவாய் மலர்ந்தருள வேண்டுகின்றேன்' என, அவருட் பெரிய வள், "யாம் அலர்மேல் மங்கையும் அவள் நற்றாயும் ஆகிய இருவர். எமது பெயர், ஆண்டுப் பிரசித்தம்" என்று முடித்து மறு வீதியாகிய 'பப்ளிக்' 'ரோட்டை' யடை ந்து மறைந்தனர்.

பின்னர் இவ்வாலிபன் அத்திறவுகோ லைக் கட்டப்பட்ட மங்கல நாணோடு கையிற் றாங்கித் தான் சென்றவேலையைச் சடிதி

யில் முடித்துப் பின்றனக்கு அந்தரங்க சினேகிதராயும் பச்சையப்ப சாலையிற் பிரதமகலா பரீக்ஷைக்குப் படிப்பவராயும் இருக்கும் பா. இராமாநுஜாசாரியர் என்பவரைக்கண்டு திறவுகோலைக்காட்டி அதன் வரலாற்றையு முரைக்க அவர் 'இஃது ஆச்சரிய விஷயம், முன்பின் னறியாது உம்மிடத்து இச்சாவியை யவர் எவர்தாமாயினு மீவரோ? மேலும் அது பணப்பெட்டித் தாள் என்றனரே; சாவியும் விற்றாலும் இரண்டணைக் கிடைக்கத் தட்டில்லை. எதற்கும் நீர்போய் இதையாங்கிருந் தெம்மிடம் வாரும்' என அவ்விலையோ னச்சாவியுடன் வைராகிமடம் கோயிலுக்கு நேரெதிரே வருகையில் தன்முன்னோரைவிலின் கிடக்கையிலிருந்து தான் முன்கண்ட இருவருள் மூத்தவளானவள் தன்னைநோக்கி முன்வரக்கண்டு காலடிபெயர்க்கா தங்ஙனே நின்றனன். அம்மாது சிரோமணியு

மெதிர்நின்ற கோயிலுக்கெதிர்வந்துநின்று அச்சாவியைப் பெற்றுக் கோவிலினுள்ளேயே புகுந்தனள். இச்சிறுவன் திரும்பி வீட்டு முகமாய் ஐந்தடி வைக்குமுன் 'இதோ ஈந்தேன் பெற்றனை, போக—— திறப்பதோர் தாள்!' என்று மொருவாக்குச்செவிபடக்கேட்டு, திரும்பியக்கோவிலுட்புகுந் தெப்புறமுஞ் சுற்றிப்பார்த்தொருவரு மில்லாமையாற்பின், முன் சொன்னதன் சிநேகிதர் வீட்டிற்கேகி அன்றந்திப்போழ்து கழித்து விளக்கு வைக்கக் கோயிலடைந்து, ஆங்குள்ள திருக்குளத்தி லந்திக்கடன் கழித்து, கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீனிவாச மூர்த்தியைக்கண்டு வணங்கித் தீர்த்தப்பிரசாதம் பெற்றுத் தாயார் சந்நிதிக்கேகித் தொழுது, தம்மோடு நின்ற ஒருவரை 'இப்பிராட்டியின் திருநாம மடியேனறியப்போகுமோ?' என்னவப்பெரியவர் 'அலர்மேல்

மங்கையிவள் திருநாமம்' எனச்சொற்ற
மைகேட்டு, திருமேனி புளகாங்கிதங்
கொண்டவனாய், அவ்விரவு முழுவதூஉம்
இதே எண்ணமாய் முற்சொன்ன இராமா
நுஜாசாரியர் வீட்டிற்கழித்து மறுநாட்
காலைச் சைதையம்பேட்டை யடைந்து
இந்நூலியற்றினன்.

---

ஸ்ரீ:

## திருநகர்த்தாள் கொடுத்துதவிய

# திருத்துறை

### கட்டளைக்கலித்துறை.

கண்ணன் கழலிணைக்கீழ்
அடியாட்செயும் நற்பதவி
விண்ணந் திருநகர்ப்பத்த
ரீட்டம்யாம் பெறவுதவும்,
வண்ணம் சிறியதோர்
பொன்னந்திருத்தாளிது வரவால்,
தண்ணந்துழாய் பெற
நண்ணுமனமே! மலர்ந்தருளே. (1)

அருளாழி யலைத்தெதிர்
மடைநூக்கிப் புரள்வதொக்கும்

திருமால்திறம் எம்மிடத்தும்
எம்மோரிடத்தும் அறிவாய்!
பொருளாற் பெருகிய
நங்கையர்நந்தம் பிராட்டியர்கள்
தெருளார்மனம் அருள்வான்
நமக்கீந்தார் இக்கோல்திறவே. (2)

திறவுகோல் ஈந்தென்
றிறந்தருளீந்த என்னப்பனையே
மறவாதடைந் தேத்துவையாகில்
என்றும் அவனருளால்
பிறங்குமோர் பொற்றாமரைப்பூ
எனப்போணி பெறவே
இறவாதினையாது இணையடிக்கீழ்
பெறலாம் மனமே! (3)

மனமே! திறவுகோல்;
ஈங்கிதுகொண்டுன் மடைதிறந்து
புனலே எனப்பெருகும்
திருமால் அருள்பெற்றிடுவாய்.

கனவுநனவும் கழியாதவனை
  நன்னீர் கொடாட்டி
வனமாலையந் தண்டுழாய்
  கொடுசூட்டுவ சூடலாமே. (4)

சூட்டுவசூடித் திளைத்தெதிர்நின்று
  அவர் மார்பணைவான்
நீட்டிய கைதடுத்தாங்கவர்
  பெண்மனம் ஆட்கொடுபோய்க்
கூட்டிய ஆயர்தம் தேவிய
  ராய்க்கண்ட மாயவனார்
ஈட்டிய விண்ணகர்க் காட்பெற
  ஈந்தார், திருவருளே. (5)

திருவருள் என்றும் திகழ்தரும.
  ஒக்கநம் தீவினையால்
பெருகிய மும்மலம் அற்றிட,
  ஆங்கலைதார் திரையார்
கருநீர்ப்பெருங் கடலாய்த்திகழ்
  மாங்கதன் மேலிடத்தே

கருநீல வண்ணன் உலகுண்டவாயொடும்
கண்வளர்மே. (6)

வளர்பொருள் ஈட்டுநின்னோர் தொழில்
நீ இனி ஈங்கொழிவாய்க்!
இளாகல் நீர்க்கடல் நீத்தெதிர்
நன்னகர் ஏகியமால்
தளரிடைகண் டெமக்கீந்தான்
துறக்கம் திறப்பதோர்தாள்:
தளரிடை யுற்றார்க்கு
இனிநாம் தளரிடை நீக்குவமே. (7)

நீக்குவம்*யாம் பெருமான்
நினையாதவரைக்; கொடுபோய்ச்
சேக்கலம் எம்மவனீட்டிய
இக்குழாம் கூற்றுவற்கே:
போக்கலம் அத்துணை
பொய்க்நரகெய்தத்; திருவருளால்,
போக்குவம் அத்துணை; பொன்னகரெய்த
இறந்தெழாமே. (8)

---

* 'நீக்கலம்' என்றும் பாடம்.

இறந்தெழு நன்னகர்யாம்
பெறுமுன்னுயு மிவ்வுலகே,
பிறந்தவனுய்க் குலமும்பலநற்
குலமுந் திகழூர்;
சிறந்தவர் விண்ணோர் தொழுவருளூர்;
இது வாழியரோ,
திறந்து விண்ணோர் நகர்புக்குய்யத்
தாள்பெறும் நன்னகரே. (9)

நன்னகர் யாம்பெறு முன்னுயு
நல்வழி காட்டிடுவான்,
பொன்னகர்த்தாள் நமக்கீந்தனன்
நம்மிறையும், மதியால்
துன்னிய நம்மவர் வாழ்ந்திடத்
தாள்துழாவிக் கொடுபோய்ப்
பன்னியரேத்து பைப்பாம்பணை
யானைத்தொழு மனமே! (10)

தொழுமனமீந்தடி நீட்டிய
எம்பெருமான், எமக்கே

கழிபெரும் செல்வக் குவிக்கலையாமை,
அருள்திருவே
பொழிந்தனனும்; அது யாம்பெறப்
போழ்குவமால்; இறையே
எழும்! எழும்! எம்மவன் எம்மிறைக்
காட்செய நீர்எழுமே! (11)

நீரெழுமொக்குட்கு மிழாக்கை
நீங்குமுன்னம் பெறுதும்;
சீர்கெழு நித்தியசூரியராக்
கையாம் பொன்னுடம்பின்
ஏரெழில் ஏற்கும் மெஞ்ஞானமும்,
ஆமறையோர் ஒழுக்கும்,
பேர்கெழு வீடுயர் உற்றடைப்
பொற்றிரவும், முறையே. (12)

முறைகொளப் போக்கினன் எங்கும்தனை;
எம் முகுந்தனென்னும்
துறையடைந்தேறிய தோணிகள்
எண்ணில யாம் அவைகீழ்ப்

பறையறைவான், எம்மிறையும்
பணித்தாள் கொடுத்துதவும்;
மறையந் தணர்க்காட்செயும்
ஆளடிக்காட்செயு மடியே. (13)

ஆளடிக்காட் செயவே பலவாம்
தவமே யியற்றிக்
கோளரிமா தவன் கோவிந்தன்
கோளருளால் அடைந்தோம்,
தாள்பெறு மிப்பிறவிப்பதம்;
நன்மனமே! தொடுசேர்
தோளணியாம் துழாய்க்காம் குழல்யாம்
பெறலுற்றனமே. (14)

உற்றனமாய்ப் பலநாளளவும்
வினை தீவினையே
கற்றனமாய்க்குல மாயவன்
ஆயவனை யறியாச்
சிற்றினமாயவ ரோடிணைந்தே
யுழன்றோம் அருளே

பெற்றணைமாற்பின் பிராட்டிய
    ரீந்தனவே யடைந்தே. (15)

வேயடை வேங்கடத் தெம்பெருமான்
    நகர்த்தாள் இதுவோ !
கோயிலரங்கன் கொடுத்துதவும்
    திருக் கோலிதுவோ !
ஆயவனாயவன் ஆய்நகர்த்தாள்
    இதுவோ ! அறியோம்!
ஆயனையார் இருகன்னியர்
    வந்தெமக் கீந்ததுவே ! (16)

ஈந்ததுதான்பெற வேகினன்
    எம்மிறை யெம்மெதிரே.
ஈந்ததுபெற்றுடனே எதிர் கோயிலில்
    நின்றருளால்,
ஈந்தனனாய் அபயந் தரித்தென்
    மனமாட் கொளவே,
ஈந்தனன் தாமரைக்கண் கடை
    நோக்கும், எழில் பெறவே. (17)

எழில்பெறவே பெருகும் நதி
கண்வளர் எம்பெருமான்,
தொழில் வசமாய்ச் செலும் ஏனையர்போல்
எமை விட்டகன்றே,
தொழில்கிளர் ராழியும் ஈயான்;
மனைத்தாள் அதுங் கொடுபோய்
எழில் மாமையா மிழந்தேங்கும் வகை
எமை வாட்டுவதே! (18)

வாட்டுவதாய்ப் பல ஊழிக
ளாயின ஓரிரவே!
வாட்டுவதாய் எமக் கீந்தனையோ
திருக்கோல் வரவே!
வாட்டுவதாய் எமக் குற்றனையோ
உலகப்பிறவி!
வாட்டுவதாய் எமக்குற்றனையோ
திருவேங்கடமே! (19)

வேங்கடமேயவன், நின்றவனாய்,
இருந்தே, கிடந்தான்;

நீங்கள், உந்நீர்மை யறிந்தவற்
கீங்கடனே கொடுமின்!
ஈங்கடன் நீரவற் கீந்திலிராகில்,
உம்வீடகமே,
பேங்கடல் நீருணப் போந்துணையும்,
எழான் பாம்பணையே. (20)

பணமாயிரம் பாந்தாதியன்
ஓரணையாய்த் திகழக்,
கணையாயிரம் கழற்காலடி
யாயிரம் பேர்வருடத்,
துணையாயிரம் தோள்வரை சூழ்,
திருவளர் மார்பசலன்,
அணையானுமை இங்ஙனமாக்குவதோ,
இணை முலையே! (21)

முலைகளோ, பொற்றுமரைப்பூ என
நன்மணங் கமழ்வால்,
அலைகின்றன தாமரைப்பூ என ;
அம்புலிக்குதவும்

கலையாயிரத்தானும் இவ்வாடையினானும்
இவ்விரவே.
தலையாயிரம் சேர்குடையான்
இலையினும் போதரவே! (22)

போதராய்க் கண்ணா! எனவே
யொருதரம் கத்துமன்றில்,
போதராய்க் கண்ணா! எனவே
இருதரம் கத்துமன்றில்,
போதராய்க் கண்ணா! என
மற்றொருதரம் கத்துவதோ!
போதராய்க் கண்ணா! எனப் போந்தனை
வெண்ணெ யுண்டிடவே. (23)

வெண்ணெயுண்ணப் போந்தடலாய
ரில்லம் புகுந்தடைவே
பெண்ணையன்றில் அனையார்
ஈட்டிய நெய் தயிரொடுபால்
திண்ணையேறித் தாழியில் நீட்டிய
கைதுழாய்க் கொடுபோய்

விண்ணிலீட்டடங்கொடு ஊட்டிய
விண்ணவன் ஆயவனே. (24)

அவனேநமக் கீந்தனன் இத்திறவுங்கால்
ஆம்பின்னுமே,
அவனே திருத் தாமரைக்கைகளாற்
கொண்டனனு மாமால் ;
அவனேயதனால் நமக்கீகுவனிந்
நகர்ப் பொருளும் ;
அவனேயதனால் நமக்கீகுவன்
அந்நகர்ப் பொருள்மே. (25)

நகர்ப்பொருளே கொண்டு வாணிபம்
செய்வனவாய்த் திரியும்
தகட்டடிமேவிய கூம்புடை
நீர்க்கடல் வங்கமேலாய்ப்
புகற்கரு நீர்க்கடற்றீவுக ளெல்லாம்
புகுந்தனமாய்ப்
புகற்கரு நல்வழியே புகுவோம்
எந்நாராயணனே. (26)

நாராயணனே ! எம்மையாளுடைய
எந்நாரணனே !
பேராயிர முடையாய் ஓ !
பதியாயிரம் உடையாய் !
காராயவிரும் கண்ணனேயோ !
கதியாயவரன்னனேயோ !
ஓராயிரம் அடியார்சூழ்
ஒளியுருக்காட்டுவையே ! (27)

உருக்காட்டுவ தடியாய்
எமக்குற்றனை பாற்கடலே,
உருக்காட்டுவ தடியாய்
எமக்குற்றனை கோயிலுமே,
உருக்காட்டுவ தடியாய்
எமக்குற்றனை வேங்கடமே,
உருக்காட்டுவ தடியாய்
எமக்குற்றனை எவ்வுளூர்மே. (28)

எவ்வுள் இராஜர்கோன், நீதோய் !
எமக்காகியவன், நீதோய் !

பௌவம் கடைந்தவன், நீதோய்!
பறவை கடாவி, நீதோய்!
கவ்வயர் * விண்ணாய், நீதோய்!
கரியுருக்காய, நீதோய்!
தெவ்வயர் ஆழியாய், நீதோய்!
தெருள்மறை ஆதி நீயே! (29)

நீ அறிவாய் எமக்காகிய எல்லாம்
கடல்வணா! நீர்
தோய்வரை பேய்க்கும் துழாய் அலர்
தோளாற்கடல் கடைந்தே,
நோய், பசி, மூப்பிறப்புத், துன்பம்
வானவர்க் கோட்டிடுவாய்!
ஈ, யெறும் பாதியும் தோய்ந்தவற்†றுள்
ளுயிராயவனே! (30)

உள்ளுயிராய் அடியார்க் கெளியோய்,
மற்றவர்க் கரியோய்!

---

* ‘மின்னாய்’ என்றும் பாடம்.
† ‘அவைக்குள்ளுயிர்’ என்றும் பாடம்.

புள்ளுருவாய் மறையோதினை, முன்
அயன் முன்னிலையில்.
புள்ளுருவாய்ப்பிளந்தாயவர்க்
கோங்கிய வித்தகனே !
புள்ளுருவாய் வந்தடியனை
யாட்கொளாய் அந்தியிலே. (31)

அந்தியம்போது, அகல் ஞாலமும்
அன்றிப் பெருவிசும்பில்,
அந்தியம்போது, அகல்வானமும்
அன்றித் திருக்குறுங்கில்,
அந்தியம்போது, அடல்ஆழியும்
இன்றித் திருவுகிரில்,
அந்தியம்போது, அடல்மார் பகலம்
பிளந்தாய் அவற்கே ! (32)

பிளந்தபின், சேய் மதலைப்
பிரஃலாதனுக்காய் வரமாய்க்
கிளந்தன வீந்து, பின்கேழ்முடி
சூட்டினை, கேசரியே !

இளகல் ஆர்கலி நீர்புகுந்திவ்
　　வையம் கோட்டிடையே,
இளகல் நீள்விசும் பெல்லாம்
　　நிறைந்தனை, கேழலாயே. (33)

கேழலாய் நீ யிடந்திம்மண்
　　அளந்தனை, வாழியரோ!
கேழலாய் நீ யளந்திம்மண்
　　நடந்தனை, வாழியரோ!
கேழலாய் நீ நடந்திம்மண்
　　மணந்தனை, வாழியரோ!
கேழலாய் நீ யாசாண்டனை,
　　கீழ்க்கிடந்து முண்ணவே! (34)

உண்ணத் தயிர்த்தாழியி லெட்டிய
　　மட்டும் நீட்டிவாரி,
உண்டனவெல்லாம்,எழிற் கோதையர்க்கே
　　உரித்தென்பரால்;
உண்டனவெல்லாம் அவர்க்கே
　　உரித்தென்பராயினும், ஆர்

வண்டுழாய் மாலையாய்! மாயமே
மாயாத உன் செய்கையே! (35)

உன்செய்கையே, பிதா, அன்னையாய்
நீகோள், கடல்வணா ஓ!
உன்செய்கையே பிதா அன்னையாய்
நீ கோள், முகில்வணா ஓ!
உன்செய்கையே பிதா அன்னையாய்
நீ கோள், விசும்புளாய் ஓ!
உன்செய்கையே, பிதா, அன்னையாய்
நீ கோள் மறைமுடியே! (36)

முடிசேர் துழாய் மலரீந்தெனை
யாட்கொண்ட ஓர் வித்தகன்
அடிசேர் துழாய் மலரே நினைந்தல்
லெலாம் கண்ணுறங்காய்!
கடிசேர் துழாய் மலர் தீர்த்தமும்,
கண்ணன் கழலிணையும்,
கொடுசேர் துழாய் மலர்க்கோதைமண
நீ விரும்புவதே! (37)

விரும்புமவனோ, விழுமிய
விண்ணகர் நாரணனும் ;
தரும்பணி, வையம் தடாவிய
தாமரைத் தாளிணைக்கே ;
இரும்பகையா னெனதென்னும்
அகப்புறப் பற்றுகளே ;
கரும்புயல் வண்ணன் கொடுத்து
பின் வாட்டுவதிக் குழலே ! (38)

குழலூதியபோது, அமுதின் இனிய
நின் கொங்கிளம்வாய்
மழலைக்குவந்தனரோ !
இலை மாமைக்குவந்தனரோ !
அழல்போல் மிளிர்ந்தநின்
தாழ்வட மாலைக்குவந்தனரோ !
குழற்கோதையர், ஈதில் எதற்குவந்தார்,
உவந்ததுவே ! (39)

உவந்தது கேட்டு வளநகர் வானவர்
ஈண்டினராய்க்

நவிந்தனர் காகுத்தன் கார்குழல்
உச்சியிற் கண்விழித்துக்,
குவிந்தனு செவிவாய் மடுத்தனர்
கானக் குழலிசையே ;
உவந்தநின் கோலக் குழலிசை
யூட்டுவை, ஊட்டுமாறே. (40)

ஆறுகண்டாடும் மயிலினம்
கண்டுன் அகமகிழ்வால்,
ஆறுசூழ விண்ணுமேடன ஒரு
நாடியற்றத் துணிவாய்.
ஆறுசெய்கைத் தொழிலந்தணர்க்
காளாய் அணியரங்கத்(து)
ஆறுகண்டாட் செயக்கோருவேன்,
ஆய் கழற்றுமனைக்கே. (41)

தாமரைச் செங்கணுய் !
எம்மையாள் நீ கோள் புனலரங்கா !
சேமமைந்தீட்டினல்
எம்மையாள் நீ கோள் திருவரங்கா !

சாமரை காலசைத் தெம்மையாள்
நீ கோள் * சமராங்கா !
காமரச்சோலை சேர்ந்து எம்மையாள்
நீ கோள் அகமடர்த்தே. (42)

அடர்த்தாய் அலைகடல் நீர்
புகுந்தோர் மீனமாய்ப் பிறழ்ந்தே !
அடர்த்தாய் அலைகடல் நீர்
புகுந்தோர் கேழலாய்ப் பிறழ்ந்தே !
அடர்த்தாய் இரணியன் மார்பிடம்
கோளரியாய்ப் பிறழ்ந்தே !
அடர்த்தாய் இராமனுய்க்காழ் குலம்
ஆள்குலமாய்ப் பிறழ்ந்தே ! (43)

குலமாய்ப் பிறழ்ந்த நின் நீள்
முடிக்காய் நகர் கோலஞ் செய்து
பலராய் உனை நற்புனல் நீர்
கொடாட்டித் தொடை மலரும்

* 'நகராங்கா என்றும் பாடம்

வலமாய் அணிய ஒரு
முராசார்ப்ப, அமரர் குழாம்
வலமாய்க் கொடுபோய்
அரக்கர் குழுவோழித்தனையே. (44)

அழித்தபின் ஆய்முடி சூட்டினை
ஆழ்வர் விபீடணர்க் காய்க்
கழித்தவ் வயோத்தி கடந்
தாழ்ந்தனை காவிரி யரங்கம்.
பழித்த வருய்யக் கழலடி
யீந்தகரு முகிலே!
செழுத்த செந்தாமரைத்திண்
கழலீ குவை ஆழ்ந்த வேற்கே. (45)

ஆழ்ந்த வென்னெஞ்சம் முழுவது
மாழ்ந்திலதும் மிடத்தே!
காழ்ந்த வென்னஞ் சகத்தாழ்ந்தில
வெத்துணை நற்குணமோ!
தாழ்ந்த வென்னெஞ் சகந்தாழ்ந்தில
தெத்துணை நல்லடியோ!

ஆழ்ந்த * நல்வேதமும்
 † ஆழ்ந்துன் முடிகண் ‡ டறிந்திலதே!

o இலதாய்ப் பல பல
 ஊழிகளாயின பின் பருளால்,
இலையாளி விருந்தியற்றினை
 இன்னுயிர் இவ்வுலகில்,
நிலையாதனையா முறுமை
 நிலை நின்ற நின் திருவே,
நிலையாய் எமக்களித்
 தின்னுயிர் ஓம்பிடும், எம்விதியே!(47)

விதிபோல் எமக்குறு நின்றனை
 ஆவிகொண் டெம்மெதிரே.
நிதி பறிப்பான் நின்ற
 மங்கையர் கோனுக்குத வினைபோல்

---

* 'நால்வேதம்' என்றும், † 'ஆய்ந்துன்' என்றும் பாடாந்தரம், ‡ 'அறிந்திலவே' என்றும் பாடம்.

o 'இலவாய்' என்றும் பாடம்.

பதிதிறப்பான் எமக்
    கீந்தனே சாவி கொடுத்துதவி,
கதியாய் எமக்கறி
    வித்தனே நின்றிருமந்திரமே. (48)

மந்திர மாயதிரு வெட்டெழுத்
    தோர்கிலா மடையன்,
தந்திரமாய இடரேர்
    பலவாம் வழிகளேபோய்
அந்தியங்கால மடைமுன்
    வழிபறித்தாட் கொண்டவுன்
கந்தரத்தாழ்ந்த நினைவின்
    கருணைக் குரையுளதே! (49)

"உளபோல் உலகுளவாம்
    பல வூழ்வினை யூறுகளில்
அலைபோம் கொடுமை நிலை
    போம்" எனத்தேர் அகத்துரைத்தாய்.
தலைபோந் துறுமைக்கழுங்கு
    முயிர் நிலை என்னிலையாய்க்

களைபோந் துழுமை, உதவுவை
* ஒண்ணுரை யாட்கொளவே. (50)

ஒண்ணுரையாட் கொளப் போந்தியாம்
ஒள்வாளெறி கிலம்;பின்
நண்ணூர் படையுழக்
கித்திகழும் தறுகண்மை நண்ணேம்;
விண்ணோர் பலருனக் காய்த்தம்
தண்ணீர்மை தவிர்வரேனும்,
தண்ணூர் துழாய் எனத்தண்ணிய
நீர்மையாங் கொள்ளுவமே. (51)

கொள்ளும் கொடு வினையாற்
பலர் சிறித்திகழ்வ ரேனும்,
தெள்ளியபாற் கடல் போல்
மனம் தெள்ளிய நீர்மையே தந்து,
எள்ளிய ஏழையேன் நெஞ்சுள்ள
அப்பாற் கடவிடமேற்

* 'ஒன்னூர்' என்பதன் மரூஉ.

பள்ளி கொண்டென் றும்
திகழுவே வாழி நீ வாழுமாறே. (52)

வாழிய நீவினை யாழுகத்
தாயவரேனு மேயாம்
காழிய நெஞ்சம் கொடு
காய்ந்தவர் திருநாடி ழுக்க
ஆழிய நீர்மைதவிர்த்
தறக்காய்வதோ? ஆற்றிடை நீ
தாழிய நீர்மையறி
கிலமோ, அரங்கத்தண்ணலே! (53)

அரங்கத்தணலே!
அயோத்தியமான் அரசே! அடியேன்
* சிரங்கவித்தாளடி வீழ்ந்து
செயும் விண்ணப்பம் இதுவே,
கரந்தொடு போய்க்கடல்
நீரிற் கவிழ்த்த கடும் பொழுதும்

* இப்பா சுரத்திற்குப் பெண்பால் பாடம்வேறு.

பாங்கொழு தேத்தும் பிரளிலான்
பலம் கொடும் நாயனேற்கே. (54)

நாயனேன் முன்னின்ற நீர்மை
மறந்தங்ஙன முழுலும்
சேயனார் கூடிய இக்குழாம்
சேர்ந்து பழிப்பதுவோ!
வாயினானும் மனத்தானும் தொழு
தெழாப்பாவியேம் நாம்,
தாயனுன் தூமன மீயத்தரை
கிடப்பாய் கிலமே! (55)

ஆய்மலர் வானவர் விண்ணோர்
கள்தூய்க்கொடு வாழ்த்து மலிதோ!
பாய்மனமாட் கொளக்கீழ்மண்
விசும் பெலாம் பாயவலிதோ!
காய்மனக்காளியனுப்
முடியாடிய பாதமலிதோ!
வாய்மனோ காயங்களால்யாம்
தொழ நின்ற இவ்வடியே! (56)

இவ்வடிக்காட் செயாப்பாவியேம்,
விண்ணுடைந்த பின்னங்கு,
அவ்வடிக்கீழ் என்புரிவதோ
ஆய்கிலோம்! அந்நகரோ,
உவ்வடி, எவ்வடி, என்றடி
தேடித்திரியும் பலர்
எவ்வடியும் தொழக்கை கட்டிக்
காத்திருக்கும் நகரே. (57)

நகர்க் காவிரியறியா மாந்தரோ
விரஜாநதி சூழ்
நகர்க் காவிரியறியப் போந்தொடு
கழல் வீரராவார் !
நகர்ப் பெருங்கோயிலறிகிலா
மாந்தர் நெடுவிசும்பின்
நகர்ப் பெருங்கோயிலறி
வஃதெவனோ அறிகிலோமே! (58)

அறிகிலோம் எங்கோன் நகரடைந்
தங்கோர் அழுக்குடம்பர்:

அறிகிலோம் எங்கோன் ஒழுக்கமை
யாப்பக்தர் ஆய்நகரில்:
அறிகிலோம் எங்கோன் கழலடைந்தா
காத தொன்றுள தாங்கு
அறிகிலோம் எங்கோன் மறை பொழுக்
கம் கொடான் என்பஃதே. (59)

அஃதறியார் பலர், “தம் *மனமொன்றே
அகல் விசும்பாள்
எஃகம்,” என்றோதுவர்! எற்குமந்
நீர்மை அகமழியாது
“ இஃதே பரம் பொருள் ” என்றதைப்
போற்றும் தருக்குடை யார்க்கு.
இஃதோ திரு நாட்டையும் எழில்
ஆக்கையர்க் கொத்ததே! (60)

ஒத்ததொன்றோர் மிறே, ஞானிகாள்!
எம்பெருமான டிக்கே

* ‘மத மொன்றே’ என்றும் பாடம்.

பத்தராய்த்திர் வதிற்பிர்ந்த பத
மொன்று வேறிலையாம்.
வித்தகன் மாயவனாயினும்
பத்துடையார்க் கெளியோன் :
முத்திதந்தாட் கொளும் மூர்த்தியே
மூவரில் மூத்தவனே. (61)

மூத்தோன், முதல்வன், மறையவன்,
தூமலரோன், என்கேனே !
காத்தோன், கடல்வணன், வையம்
விழுங்கிய கோன், என்கேனே !
நீத்தோன், நிமலன், நியந்தா, திரு
நெடுமால், என்கேனே !
தீர்த்தனைப், புண்டரீகக் கண்ணனை,
என் தலைவனையே ! (62)

தலைவன் தலையவர்க் கெல்லாம்
தலைவனும் தண்டுழாயன்,
மலைமகள் போலும் அருளுடை
மாயவன், மாமலரோன்,

கலைமகள் போலும் கலைவலன்,
ஞானப்பிரியன், ஆயன்,
அலர்மகளை தனக்காய் மனையாளாய்த்
திகழ்பவனே ! (63)

திகழும் தரை, நீர், எரி, கால், விசும்
பெலாம் ஆயவனே!
திகழும் தரை, நீர், எரி, கால், விசும்
பெலாம் வாயவனே !
திகழும் தரை, நீர், எரி, கால், விசும்
பெலாம் தாயவனே !
திகழும் தரை, நீர், எரி, கால், விசும்
பெலாம் தோய்மிவனே ! (64)

விசும் பெலாம் தோய்ந்த விரு
சுடர் மீன் களும் சேர்ந்துணைப்,
பசும்பொன்னொளி திகழ் மின்னற்
கொடிகளும் பாய்ந்திகல,
விசும்புலாம் காள மேகங்களும்
வீழ்நீர் பொழிந்திழிய,

விசும்பெலாம் விண்டுவின் நீர்மைக்
கொருவகை ஒக்குமன்றே! (65)

ஒக்கும் கரிமால் தனக்குவர்
நீர்க்கடல் ஒண்ணிறத்தால்.
ஒக்கும் திருமால் தனக்குயர்
நீர்மழை ஒண்குணத்தால்.
ஒக்கும் பெருமான் தனக்குயர்
விண்ணகம் தன்னிறைவால்.
ஒக்குமரங்கன் அருளதற்
கொன்றுலகத்துளதே! (66)

ஒன்றுலகம் பலபேசினும்
ஓங்கியுலகளந்தான்
ஒன்றும் திருநாடளப்பரிதாம்.
அதில் ஆழ்ந்தவரோ
என்றும் பிறப்பிறப்பில்லாப்பதவி
யியைந்தவராம்.
என்றும் திருநாடடையத்
திருமால் சரண் அடையே. (67)

அடைந்தவரைத் திருமால் ஒருபோதும்
நழுவவிடான்!
அடைந்தவரைத் திருவீந்தவல்
முப்பிடி கொண்டவனே
கடைந்தமுதம் தந்தமரர்க்
குதவிக் கயற்கண்ணரைக்
கடந்து றியைத்தாய் நறு வெண்ணெயோ
டமுதுண்டவனே! (68)

அமுதுண்டவனைத் திருமால் தனைப்
பெறுமுன், இருநீர்
யமுனைத்துறை யாடிடுவான்
களைந்தனர் தம்முடையைத்
தமதாகிய தம்முடையைக் கொடு
போயினன் திருமால்.
தமதாகிய தம்முடையைக் கொடுத்
தாண்டனன் உயிரே. (69)

உயிராம் எமக்கெம்மிறை, யாம்
உயிராய் அவற்குளமாய்ப்

பயிர்போற்களை கட்டனனும்
பகைவரை யட்டதுவே.
மயில்போல் மடந்தையரைக்கொளப்போய்
அவர் சட்டியடை
தயிர்போற் குளிர் நோக்கம் ஈந்தவ
ருள்ளம் கவர்ந்தனனே. (70)

கவர்ந்த அந்நோக்கம் கவற்றுவ
தின்னும் நினைப்பவர்க்கே!
தவழ்ந்தவத்தாய் மகன் இன்னும்
தவழ்வன் நினைப்பவர்க்கே!
கவர்ந்த அந்நோக்கம் கழற்றுவதின்னும்
திருவரங்கா!
கவர்ந்த நுந்நோக்கம் கிடைத்தனர்
உய்ந்தனர் உய்யுமாறே! (71)

உய்யுமாறுய்ந் தென்வினையெலாம்
கண்டுடனே அருளாற்
கொய்யுமாறுய்த்தென் கொடுவினைத்
தாளறுத்தென் மனதைச்

செய்யுமாறெல்லாம் செயப்புகுந்
தேர் தரு நல்விதையாம்
பையுடைப் பாம்பணையானுக்
குரியதை நட்டனனே. (72)

நட்டபின் நாயனேனைக் கெழீக்கொண்
டோராய் உற்றவர்க்கும்
தொட்டவர்க்கும் தொடுபோ
யவர்க்கூம் தன் திருவருளை
வட்டமிட்டாழியும் சங்கும்
அழலாற் பொறித்தனனும்;
கட்டளையாம் மீறலம் இனிக்
காருத்தன் கட்டளையே. (73)

அளைதயி ருண்ணப்போய் ஆயர்
அழுதினினி யதன்சொல்
விளைவாலவாகம் *புக்கோனிடத்
தாழ்ந்தவ னருளால்

* 'தொக்கோன்' என்றும் பாடம்.

தளைபோய் அடியார்குழாம் புகத்தாள்
பெற்ற * ஸ்ரீகிருஷ்ணன்
தளையுரையாம் இவையோதுவர்
கண்ணன் கழலிணையே. (74)

* 'சைதையரோன்' என்றும் பாடம்.